## மாநகர் போக்குவத்துக்கழகம்(சென்னை)லிமிடெட்

சு.எண்:48/15548/போ(பொது 1)/மாபோ.க/2021 நாள்:07.05.2021

# சுற்றறிக்கை

பொருள்: மா.போ.க இயக்க பிரிவு மா.போ.கழகம் இயங்கும் **சாதாரண கட்டண நகர** பேருந்துகளில், அனைத்து மகளிரும் கட்டணமின்றியும் பேருந்து பயண அட்டை இல்லாமலும் 8.5.2021 முதல் பயணம் செய்ய அனுமதித்தல் குறித்து நடத்துநர் ஓட்டுநர்கள் உத்தரவு இடப்படுகிறது.

பார்வை: 1. அ.எண்:19 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்(சந-3)துறை நாள்:07.05..2021

2.அரசு செய்தி வெளியீட்டு எண்:245, நாள்: 07.05.2021

*****

பார்வையில் கண்ட அரசு உத்தரவில் தமிழகத்தில் உள்ள மா.போ.கழகம் உள்ளிட்ட அரசு போக்குவரத்து கழகங்களால் இயக்கப்படும் **சாதாரண கட்டண நகர பேருந்துகளில்**, பணிபுரியும் மகளிர், உயர் கல்வி பயிலும் மாணவியர் உள்ளிட்ட **அனைத்து மகளிரும்** கட்டணம் இல்லாமலும் பேருந்து பயண அட்டை இல்லாமலும் பயணம் செய்ய ஆணையிட்டுள்ளது.

எனவே, மா.போ.கழக அனைத்து நடத்துநர் மற்றும் ஓட்டுநர்கள் மா.போ.கழகத்தில் இயங்கும் **சாதாரண கட்டண நகர பேருந்துகளில்**, வரும் 08.05.2021 முதல் பணிபுரியும் மகளிர் மற்றும் உயர் கல்வி பயிலும் மாணவியர் உள்ளிட்ட **அனைத்து மகளிரும்** பயண கட்டணமின்றியும் பேருந்து பயண அட்டை இல்லாமலும் பயணம் செய்ய அனுமதிக்குமாறு இச்சுற்றறிக்கை வாயிலாக உத்தரவிடுப்படுகிறது.

எனவே அனைத்து கிளை மேலாளர்கள், உதவி கிளை மேலாளர்கள்(போக்குவரத்து), மண்டல மேலாளர்கள்,வருவாய் அலுவலர்கள், போக்குவத்து மேற்பார்வையாளர்கள், நேரக்காப்பாளர்கள் அனைவரும், மகளிர் கட்டணமின்றி மா.போ.கழக **சாதாரண கட்டண நகர பேருந்துகளில்** பயணிக்க அனுமதிக்கும் புதிய அரசின் இத்திட்டம் குறித்து நன்கு தெளிவாக அனைத்து நடத்துநர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு எடுத்துரைத்து எவ்வித புகாரும் இன்றி மா.போ.கழக **சாதாரண கட்டண நகர பேருந்துகளில்**, இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**மேலாண் இயக்குநருக்காக**

**பெறுநர்**

அனைத்து நடத்துநர்கள்/ ஓட்டுநர்கள் அறிவிப்பு பலகை மூலமாக
அனைத்து கிளை மேலாளர்கள் / உதவி கிளை மேலாள்ர்கள்(போக்குவரத்து),
அனைத்து மண்டல மேலாளர்கள்,
வருவாய் மேலாளர்கள்(வடக்கு / தெற்கு)
போக்குவத்து மேற்பார்வையாளர்கள், நேரக்காப்பாளர்கள்

**நகல்:**

பொது மேலாளர்((வடக்கு / தெற்கு)/ மு.நி.து.மே(ம.வ.மே)
இணை இயக்குநர்(மக்கள் தொடர்பு)
உதவி மேலாளர்கள்(உள் தணிக்கை) /பட்ஜெட்/ ITS(கணிணி) / திட்டம்
மே.இ, த.நி.அ அவர்களின் நேர்முக உதவியாளர்,
வான் தந்தி